## அமைச்சர் பொன்முடி மீதான சோதனை – அராஜகம்! அட்டூழியம்!

# பா.ஜ.க. அரசின் தோல்வி பயத்தின் வெளிப்பாடு!

## “லிபர்டி தமிழ்” இணையதள தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் மணி ஆணித்தரமான பேட்டி!

**“லிபர்டி தமிழ்” இணையதள தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் மணி அளித்த பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:**

**நெறியாளர் பாலாஜி :** எதிர்க்கட்சிகளுடைய கூட்டத்தை, அதனுடைய நோக்கத்தை கூட்டத்தை திசை திருப்பத்தான், பா.ஜ.க. அமலாக்கத் துறையை வைத்து அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறை ரைடு நடத்திக்கிட்டு இருக்காங்க என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெங்களூரு கிளம்புவதற்கு முன்பு சொல்லி இருக்கிறார். இதை பற்றி கிஞ்சிற்றும் கவலை இல்லை என்று சொல்லி இருக்கிறார், இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்க?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** முதலமைச்சர் சொல்வது சரிதான். பெங்களூருவில் ஜீலை 17,18 எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெறுகின்றது. முதல் கூட்டம் பாட்னாவில் நடைபெற்றது. அதன் பிறகு பிரதமர் மோடியும், பா.ஜ.க.வும் எந்த அளவிற்கு அஞ்சத் தொடங்கினார்கள் என்பது அவர்களுடைய செயல்பாடுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. போபால் கூட்டத்தில் பிரதமர் மோடி என்ன பேசினார்? எதிர்க்கட்சிகளை வாயில் வந்தபடியெல்லாம் சாடினார். தி.மு.கழகத்தைப் பற்றியும், கலைஞர் அவர்களைப் பற்றியும் போபாலில் போய் பிரதமர் மோடி பேசினார். அங்கே போய் பேசவேண்டிய அவசியமே இல்லை. தி.மு.கழகத்தைப் பற்றி கும்முடிப்பூண்டியைத் தாண்டினால் யாருக்குமே தெரியாது, கும்முடிப்பூண்டியை தாண்டாத கட்சி என்று தி.மு.க.வை விமர்சித்த பா.ஜ.க. அந்தக் கட்சியினுடைய பிதாமகன், தலைமைத் தளபதி இந்தத் தேசத்தின் பிரதம மந்திரி நரேந்திர மோடி, தி.மு.கழகத்தைப் பற்றியும் மறைந்த கலைஞர் அவர்களின் பெயரைச் சொல்லி போபாலில் பேச வேண்டிய அவசியம் என்ன வந்தது?.

இரண்டாவது தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் அஜித் பவார், 70 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவில் கொள்ளை அடித்து விட்டார்கள், இவர்கள் எல்லாம் தப்ப முடியாது என்று பேசினார். அவர் பேசி, அந்த ஒலி காற்றில் அடங்குவதற்குள், ஒரு வாரத்திற்குள் அதே அஜித் பவார் தலைமையில் ஒன்பது எம்.எல்.ஏ.க்களையும் பிரித்து, சிவசேனா, பி.ஜே.பி. கவர்ன்மெண்டில் சேர்த்துக் கொண்டு இன்றைக்கு அஜித் பவாருக்கு பைனான்ஸ் மினிஸ்டரும் கொடுத்துட்டாங்க. கூச்சம், வெட்கம், மானம் எதுவும் இல்லாமல் ஒரு அரசு,. மத்தியில் இருக்கக் கூடியது மோடி அரசு. இவர்களை மாதிரி ஒரு மோசமான சர்வாதிகாரத்தன்மை கொண்ட எந்த நியாய தர்மங்களைப் பற்றியும், எந்த விளிமங்களைப் பற்றியும் கவலைப்படாத ஒரு ஆட்சியாளர்கள் இந்தியாவில் இருந்ததே இல்லை.

இந்திராகாந்தி அவசர நிலை காலத்தில் கூட இந்த அளவிற்கு இல்லை. அதைவிட ஒரு மோசமான ஒரு கவர்ன்மெண்டை மோடி இன்றைக்கு ரன் செய்துக்கிட்டு இருக்கிறது.

இன்றைக்கு பொன்முடி மீது போட்ட கேஸ் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்திருக்கு. எனக்கு கிடைத்த தகவலின் படி. இந்த வழக்கில் ஏற்கனவே பொன்முடியும், அவரது மகனும் அமலாக்கத் துறை விசாரணைக்கு ஆஜராகி இருக்காங்க, அப்படி இருக்கும் போது இந்த டைமிங் என்ன? இன்றைக்கு காங்கிரஸ் கூட்டம் நடைபெறுகின்றது. மதியம் இப்படி செய்றாங்க. இப்படி செய்தால். இப்படி பொருள் கொள்ளப்படுமே, மக்கள் மனதில் இது தானே பதியும் என்ற அந்த கவலை கூட சுத்தமாக இல்லாமல்போச்சு.

அதாவது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை சீர்குலைப்பதற்காக, அரசியல் ரீதியாக பா.ஜ.க.வை எதிர்க்கிறார்கள், 2024 இல் ஒன்று சேரப்போகிறார்கள். ஒன்று சேர்ந்தால் தான் வீட்டிற்கு அனுப்பப்படுவது உறுதி என்பதை நரேந்திர மோடி நன்றாக அறிந்து கொண்ட காரணத்தினால், அச்சத்தின் பாற்பட்டு, பயத்தில் நடுங்கி, இந்த மாதிரி சட்டவிரோதமான, அரசியல் அமைப்பு சாசனத்திற்கு எதிரான காரியங்களை இவர் செய்து கொண்டிருக்கிறார்.

**இந்த இ.டி.அதிகாரிகளும் மனசாட்சி இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். இ.டியின் டைரக்டர் அப்பாயின்மெண்ட் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருக்கு. அப்போ இந்த ரைடு செல்லாது இல்லையா. இவை எல்லாவற்றையுமே ஒருவிசாரணை செய்ய வேண்டிய சூழல் வரலாம். எல்லா கைது நடவடிக்கைகளையுமே ஒரு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரிக்கலாம். ஒரு டைரக்டர் அப்பாயின்மெண்ட்டே செல்லாது என்கின்ற போது அவர் தலைமையில் நடந்த ரைடு எப்படி செல்லுபடியாகும். ஏன் இந்த டைரக்டரை பிடித்து பி.ஜே.பி. தொங்குது என்பது இப்போது புரிகிறது இல்லையா.**

**நெறியாளர் பாலாஜி:** இது சட்டத்திற்குட்பட்டது தான். எதிர்க்கட்சியின் நிலைப்பாட்டில் இருந்து இந்த நடவடிக்கை எடுக்கவில்லை, எதிர்க்கட்சி கூட்டத்தை திசை திருப்புவதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை என்று பா.ஜ.க.வினர் சொல்கிறார்களே.?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** பா.ஜ.க.வினர் அப்படித்தான் பேசுவாங்க. பொறுமையான விஷயம் பி.ஜே.பி.யிடம் இல்லை. இதற்கு முன்பு இருந்த பி.ஜே.பி. தலைவர்கள், அன்றைக்கு ஜன சங்கத்தின் தலைவர்களாக இருந்தவர்கள். 1980 ஏப்ரலில் பா.ஜ. க. ஆரம்பிக்கப்பட்டதில் இருந்த வாஜ்பாய், எல்.கே. அத்வானி, மறைந்த சிக்கந்தர் பகத் இந்த மாதிரியான தலைவர்களுக்கு இருந்த போது அவர்கள் தர்மத்திற்கு ஓரளவு கட்டுப் பட்டு இருந்தார்கள். தற்போது செய்வது போல் கேவலமான, கேடு கெட்ட காரியத்தை எல்லாம் அவர்கள் செய்ய வில்லை. ஏன் என்றால் சர்வாதிகாரத்திற்கு அவர்களே பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கெல்லாம் மனசாட்சி இருந்தது. ஆனால் இப்போது இருக்கின்ற குஜராத் தலைமை மோடிக்கும், அமித்ஷாவுக்கும் மனசாட்சிக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அவர்கள் வந்து மக்கள் கருத்தை பெற்றவர்கள். ஜனநாயகத்தின் ஆட்சியில் ஆட்சியாளர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான தகுதிகளில் முதல் தகுதி எது என்றால், மக்கள் என்ன நினைப்பார்கள் என்ற கவலை வேண்டும் அந்தக் கவலையே அவர்களுக்கு இல்லாமல் போய் விட்டது.

இதனை ஆதரிக்கின்ற பா.ஜ.க.வினர் ஒன்றினை மறந்து விட்டு செய்து கொண்டிருக்கிறார்கள். இது நாளைக்கு அவர்களுக்குத் திரும்பும். வாளை எடுத்தவன் வாளால் மடிவான். எப்படி தீர்க்க விரும்புகிறீர்களோ, அப்படியே தீர்க்கப்படுவீர்கள். வெகுளிய வாசகங்கள், எக்காலத்துக்குமான வெகுளிய வாசகங்கள், இதில் எந்த மாற்றமும் கிடையாது.

இதனை கர்மா என்றும் சொல்லலாம். அதை எப்படிவேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். நீங்கள் சனாதனத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தால் கர்மா என்று சொல்லிக் கொள்ளுங்கள். இல்லை என்றால் இயற்கை விதியில் நம்பிக்கையாளராக இருந்தால் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அதற்கு எதிரான நடவடிக்கை உண்டு. மேலே எறியப்பட்ட பந்து எவ்வளவு உயரத்திற்குப் போனாலும் கீழே வந்து தான் தீர வேண்டும். அல்லது தத்துவார்த் ரீதியாகப் பார்க்கிறீர்களா, பி.ஜே.பி.யின் மிகப் பெரிய பலமே தாங்கள் இன்னும் ஒரு முப்பது ஆண்டுகள் ஆளப்போகிறோம் என்ற ஒரு நம்பிக்கை. அது நம்பிக்கை அல்ல, ஒரு தவறான கருத்தை மக்கள் மன்றத்தில், மக்கள் மனதில், ஊடகங்கள் மனதில், எதிர்க்கட்சிகள் மனதில் அவர்கள் நன்றாக விதைத்திருக்கிறார்கள்.

### மோடி பிரதமர் கிடையாது!

குறிப்பாக பிரதமருக்கு,அமித் ஷாவுக்கு நன்றாகத் தெரியும் அடுத்த முறை இவர்கள் வெற்றி பெறப்போவது இல்லை என்று. அப்படியே பி.ஜே.பி. சிங்கிள் லார்ஜெஸ்ட் பார்ட்டியாக வந்தாலும் மோடியும், அமித் ஷாவும் அமைச்சரவையில் இருக்கப் போவது கிடையாது. குறிப்பாக மோடி பிரதமர் கிடையாது. இந்த 323 சீட்டு அவர்களுக்கு வரப் போவது கிடையாது. குறைந்த பட்சம் 100 சீட்டாவது அடி வாங்கும். பி.ஜே.பி. சிங்கிள் லார்ஜஸ்ட் பார்ட்டியா வரலாம், ஆனால் மோடி பிரதமர் கிடையாது.

இது வந்து அவர்களுக்கு நன்றாக தெரிந்த காரணத்தினால் எதிர்க்கட்சி ஒற்றுமை சாதிக்கும் என்பது நன்றாகத் தெரிந்த காரணத்தினால், அதாவது உள்நோக்கம் கொண்டவன் தன் நிலைதடுமாறி எப்படி நடந்து கொள்வானோ அது போலத் தான் வந்து தன் நிலையை மறந்து பேஸண்ட்ஸ் ஆப் மைண்ட் என்று சொல்வார்கள் அந்த சம நிலை இழந்து இவர்கள் இந்த வேட்டை நாய்களை அமலாக்கத்துறையை ஏவி விட்டுக் கொண்டிருக்கிறார்.

இவை எல்லாம் அட்டூழியம். ஒருதேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இங்கே இருக்கிறது. இவர் ஏற்கனவே விசாரணைக்கு போய்ட்டு வந்திருக்கிறார். எங்கேயும் அவர் நாட்டை விட்டு ஓடப்போவதில்லை. நீங்கள் வேண்டும் என்றால் பாஸ்போர்ட்டை பிடுங்கி வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய மகன் எம்.பி. அவருடைய பாஸ்போர்ட்டையும் பிடுங்கி வைத்துக் கொள்ளுங்கள். அமைச்சருடைய பாஸ்போர்ட்டை பிடுங்கி வைத்துக் கொள்ளுங்கள். எங்கேயும் அவர்கள் ஓடப்போவது கிடையாது. எதற்காக ரைடு, அவர் தான் விசாரணைக்காக வந்திருக்கிறார் இல்லையா, இது எதற்காக என்றால் மக்கள் மன்றத்தில் ஒரு தவறான கருத்தை ஏற்படுத்துவது, அசிங்கமாக மக்கள் மன்றத்தில் இவர்களைப் பற்றி பேச வைப்பது. ஒரு இழிவானத் தோற்றத்தை உருவாக்குவது. இது தான்இந்த ரைடின் நோக்கம்.




நெளியாளர் பாலாஜி மூத்த பத்திரிகையாளர் மணி

**இவை எல்லாம் அட்டூழியம், ஒருதேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இங்கே இருக்கிறது. இவர் ஏற்கனவே விசாரணைக்கு போய்ட்டு வந்திருக்கிறார். எங்கேயும் அவர் நாட்டை விட்டு ஓடப்போவதில்லை. நீங்கள் வேண்டும் என்றால் பாஸ்போர்ட்டை பிடுங்கி வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய மகன் எம்.பி. அவருடைய பாஸ்போர்ட்டையும் பிடுங்கி வைத்துக் கொள்ளுங்கள். அமைச்சருடைய பாஸ்போர்ட்டை பிடுங்கி வைத்துக் கொள்ளுங்கள். எங்கேயும் அவர்கள் ஓடப்போவது கிடையாது. எதற்காக ரைடு, அவர் தான் விசாரணைக்காக வந்திருக்கிறார் இல்லையா, இது எதற்காக என்றால் மக்கள் மன்றத்தில் ஒரு தவறான கருத்தை ஏற்படுத்துவது, அசிங்கமாக மக்கள் மன்றத்தில் இவர்களைப் பற்றி பேச வைப்பது. ஒரு இழிவானத் தோற்றத்தை உருவாக்குவது. இது தான்இந்த ரைடின் நோக்கம்.**

**நெறியாளர் பாலாஜி :** மக்கள் மனதில் அப்படித்தான் புராஜிக்ட் ஆகும் என்று நினைக்கிறீர்களா,

**மூத்த பத்திரிகையாளர் மணி:** கண்டிப்பாக, அமைச்சர் செந்தில் பாலாஜி விஷயத்தில் நடந்தது வேறு. பொன்முடி விஷயத்தில் நடந்தது வேறு. அடுத்து நான்கைந்து அமைச்சர்கள் பெயரை சொல்றாங்க. அங்கெல்லாம் வரப் போகுது என்கிறார்கள். இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் மீது தொடுக்கப்பட்ட போர். உறுதியாக இதனை ஜனநாயத்தில் நம்பிக்கை உள்ள அனைவரும் எதிர்க்க வேண்டும். இது பொன்முடிக்கு வருகிறது என்று பா.ஜ.க. கெக்கலி கொட்டி சிரிக்கவும், அ.தி.மு.க. ஜெயக்குமார் சொல்றார், தப்பு செய்யவில்லை என்றால் நிரூபிக்க வேண்டியது தானே என்று , அம்மையார் ஜெயலலிதா என்ன நிலைமைக்கு ஆளானார். முறையாக போடப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது கீழமை நீதிமன்றத்தில், உயர் நீதிமன்றத்தில் தப்பித்தார். உச்சநீதிமன்றத்தில் அவர் இறந்தப்பிறகு அந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்தப் பட்டது. அவர் இறந்துவிட்டார், தப்பித்து விட்டார் என்கிறார்கள். அவர் இறந்தது உண்மைதான், அவர் குற்றமற்றவர் என்றால் அவர் சொத்துக்கள் ஏன் பறிமுதல் செய்யப்படுகிறது? அந்தக் குற்றவாளியைத் தான் இன்னமும் அ.தி.மு.க.வினர் தலைவராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த பொன்முடி ரைடைப் பற்றி பேசுவதற்கு அ.தி.மு.க. தலைமைக்கு அ.தி.மு.க.வுக்கு என்ன தார்மீகத் தகுதி இருக்கிறது.

இன்னொன்று கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல் எறிகிறார் ஜெயக்குமார். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எட்டு பேர் மீது .இ.டி. வழக்கு இருக்கு. நான் சொல்கிறேன் எழுதி வைத்துக் கொள்ளுங்கள், எடப்பாடி பழனிச்சாமி மட்டும் பா.ஜ.க. கூட்டணியை விட்டு வெளியேறத் துணிந்தால், அந்தத் துணிச்சல் அவருக்கு வராது, அது வேறு விஷயம், ஒரு கற்பனையாக வைத்துக் கொள்ளுங்கள். அப்படியே பொங்கி எழுந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள், இன்றைக்கு பொன்முடிக்கு வந்த நிலைமை, செந்தில் பாலாஜிக்கு வந்த நிலைமை அ.தி.மு.க.வில் உள்ள எட்டு முன்னாள் அமைச்சர்களுக்கும் வரும். அவர்கள் சிறைக்கம்பிகளை எண்ணுவது உறுதி. அதனால் தான் சொன்னேன் கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லை எறியாதீர்கள் என்று. இது தி.மு.க.விற்கு வந்திருக்கிறது என்று கெக்கலி கொட்டி சிரிக்கிறார்கள். நாளைக்கு அவர்களுக்கும் வரப்போகிறது.

**நெறியாளர் பாலாஜி :** டி.டி.வி. தினகரனும், சசிகலாவும் அவர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டதினால் தானே அவர்களால் செயல்பட முடியாமல் போய் விட்டது.

**மூத்த பத்திரிகையாளர் மணி:** அப்புறம்,இன்றைக்கும் டி.டி.வி. தினகரன் அரசியல் நிலைப்பாட்டை, சில தர்மசங்கடமான நிலைப்பாடுகள், சசிகலா தேர்தலுக்கு முன்பு சரியாக பத்து நாட்களுக்கு முன்பு இந்தத் தேர்தலில் ஒதுங்கி நிற்கிறேன் என்று கொடுத்த அறிவிப்பு, இவை எல்லாம் எதில் இருந்து வந்தவை. மனசாட்சி உள்ளவர்கள் சிந்தித்து பார்க்க வேண்டும். பொன்முடி ரைடு என்பது நான் வெளிப்படையாகச் சொல்கிறேன் கூட்டாட்சித் தத்துவத்தின் மீது இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் மீது தொடுக்கப்படுகின்ற ஒரு போர், இதனை வெளிப்படையாக தப்பு செய்தவன், உப்பை தின்றவன் தண்ணீர் குடிப்பான் என்று வெளிப்படையாக பார்க்காதீர்கள். அந்த டைமிங்கை பாருங்கள்.

பாட்னா கூட்டத்திற்கு அன்று காலையில் நிதிஷ் குமார் அமைச்சரவையில் இருக்கின்ற பைனான்ஸ் மினிஸ்டர் மேலே ரைடு, பாட்னா கூட்டம் முடிந்த பிறகு அல்லது அதற்கு முன்பு என்று நினைக்கிறேன். பொன்முடி கரைட்டா இன்றைக்கு முதலமைச்சர் 11 மணிக்கு பெங்களூருக்குப் போகிறார். காலையில் 7 மணிக்கு எல்லோரும் எதிர்பார்த்ததுதான். இதில் சர்ப்ரைஸே இல்லாமல் போய்விட்டது. செந்தில் பாலாஜிக்கு பிறகு இரண்டு வாரமாக எல்லோரும் பேசியது, என்ன சார் அடுத்து பொன்முடியாமே என்பது தான்.

நேற்று பிற்பகல் வந்த செய்தி, நாளை பெங்களூருவில் கூட்டம் இருக்கு அதனால் இன்று இரவு அல்லது நாளை காலையில் எதுனா அதிரடி நடவடிக்கை இருக்கும். என்ன அதிரடி நடவடிக்கை இருக்கும். என்ன நான்கு அமைச்சர்கள் வீட்டில் இ.டி. உள்ளே புகுந்து இருப்பாங்க இவ்வளவு தானே நடக்கப்போகுது.

இந்த இ.டி.அதிகாரிகளும் மனசாட்சி இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். இ.டி.யின் டைரக்டர் அப்பாயிண்மெண்ட் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருக்கு. அப்போ இந்த ரைடு செல்லாது இல்லையா. இவை எல்லாவற்றையுமே ஒருவிசாரணை செய்ய வேண்டிய சூழல் வரலாம். எல்லா கைது நடவடிக்கைகளையுமே ஒரு ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதியைக் கொண்டு விசாரிக்கலாம். ஒரு டைரக்டர் அப்பாயின்மெண்ட்டே செல்லாது என்கின்ற போது அவர் தலைமையில் நடந்த ரைடு எப்படி செல்லுபடியாகும். ஏன் இந்த டைரக்டரை பிடித்து பி.ஜே.பி. தொங்குது என்பது இப்போது புரிகிறது இல்லையா.

**சட்டவிரோதமான காரியங்களை, மனசாட்சியை அடகு வைத்து விட்டு அவர் இதனை செய்து கொண்டிருக்கிறார். இந்த அதிகாரிகள், அமலாக்கத் துறையில் இருக்கக் கூடிய இயக்குனரில் இருந்து, இந்த ரைடில் ஈடுபட்டு இருக்கக் கூடிய அதிகாரிகள் வரையில், உண்மையாக நான் சொல்கிறேன், ஒரு பிரஜையாக இருந்து நான் சொல்கிறேன். இவர்கள் அரசியலமைப்பு சாசனத்திற்குத்தான் கட்டுப்பட்டவர்களே தவிர அமித் ஷாவுக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல. மோடிக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல. அப்படி இவர்கள் செயல்படுவார்களேயானால் தொடர்ச்சியாக நிச்சயம் எதாவது ஒரு கட்டத்தில் இவர்கள் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப் படுவார்கள். இவர்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் கண்டிப்பாக வரும். இந்த மோடி அரசு, தனது குறுகியஅரசு லாபத்திற்காக, தன்னுடைய தோல்வி பயத்தில் துவள ஆரம்பித்து விட்டது.**

**நெறியாளர் பாலாஜி :** பா.ஜ.க.வும் அதே நாளில் அனைத்துக் கட்சி மீட்டிங்கை நடத்துறாங்களே?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** இதை விட கூச்சம் நாச்சம் இல்லாமல், இதனை விட ஒரு வெக்கங்கெட்ட அரசு இந்தியாவில் இருந்ததே கிடையாது. இது வரைக்கும், இந்த ஒன்பது வருடத்தில் என்.டி.ஏ. கூட்டத்தை ஒரு தடவையாவது இவர்கள் கூட்டி இருக்காங்களா, மோடி, ஒவ்வொரு முறையும் பி.ஜே.பி. கவர்ன்மெண்ட் என்று தானே கூறினார். ஆப் கீ மோடி சர்க்கார் என்று தானே கூறினார், என்.டி.ஏ. சர்க்கார் என்று எப்போதாவது கூறி இருக்கிறாரா. முதலில் 282, இரண்டாவதில் 303 சீட், இந்த ஒன்பது வருடத்தில் எத்தனை தடவை என்.டி.ஏ. கூட்டம் நடைபெற்று இருக்கு. என்.டி.ஏ. கண்வீனர் யார்? வாஜ்பாய் காலத்தில் 1998 இல் இருந்து 2004 ஆறு வருடம், முதலில் ஜார்ஜ் பெனாண்டஸ், பிறகு சந்திர பாபு நாயுடு. அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அன்றைக்கு மெஜாரிட்டியும் இல்லை. சரி, பாலிடிக்ஸ் என்பது மெஜாரிட்டி மட்டும்கிடையாது பார்ப்பக்ஷன், இன்னைக்கு குட்டி, குட்டி கட்சிகளை லட்டர் பேடு கட்சிகளை பா.ஜ.க. சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் தவறு என்று சொல்லவில்லை. அவர்களும் மக்களின் பிரதிநிதிகள் தான். பத்து ஓட்டுகளை பெறக் கூடிய ஒரு கட்சியாக இருந்தால் கூட அவர்களுக்கும் அங்கீகாரம் கொடுக்க வேண்டும், அது தான் ஜனநாயகம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இதில் பெருந்தன்மையால் வரவில்லை மோடிக்கு. அதுவும் எந்த அளவுக்கு இவர்கள் வெட்கம் கெட்டவர்கள் என்றால், அவர்கள் நடத்துகின்ற அதே நாளில் இவர்கள் கூட்டம் நடத்துறாங்களே இது தான் இவர்களின் அச்சத்தின் வெளிப்பாடு. இது தொடை நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தப்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள் இந்த நடவடிக்கைகளின் மூலம். இதனைப் பற்றிய கூச்சம் நாச்சமே கிடையாது.

கூட்டணி கட்சிகளை பா.ஜ.க. எந்த அளவிற்கு மதிக்கிறது என்பதற்கு இது உதாரணம், என்.டி.ஏ. கூட்டத்தை எதிர்க்கட்சிகள் நடத்தக் கூடிய 17, 18 தேதிகளில் அதே 18 ஆம் தேதியில் பா.ஜ.க.வும் நடத்துகிறது என்றால் எந்த அளவிற்கு ஆட்டம் கண்டு இருக்கிறது பா.ஜ.க. ஆட்சி என்பது மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அந்த பயத்தின் வெளிப்பாடு தான் இந்த அமலாக்கத் துறையின் சோதனை.

**நெறியாளர் பாலாஜி:** இந்த பெங்களூரு கூட்டத்தை நீங்கள் எப்படி பார்க்குறீங்க எதிர்க்கட்சிகள் குறிப்பா மம்தா பானர்ஜியாக இருக்கட்டும், கெஜ்ரிவால் ஆக இருக்கட்டும், எல்லோருமே கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் இன்றைக்கு ஒன்றாக வந்திருக்கிறார்கள். இதனை எப்படி புரிந்து கொள்வது.?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** அதாவது அமலாக்கத்துறையின் வெறிபிடித்த நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கு வலு சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அது எதிர்க்கட்சிகளின் வெற்றிக்குக் கூட வழி வகுக்கலாம். இன்றைக்கு கேள்வி யார் பிரதமராக வரவேண்டும் என்பது கிடையாது, யார் பிரதமராக வரக்கூடாது என்பதுதான். இன்றைக்கு கேள்வி யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பது கிடையாது, யார் ஆட்சி அமைக்கக் கூடாது என்பதுதான். காங்கிரஸ் ஆட்சி அமைக்கின்றதோ, அதன் கூட்டணி ஆட்சி அமைக்கிறதோ அவைஎல்லாம் இரண்டாம் பட்சம், நரேந்திர மோடி அடுத்த முறை தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராக வரக் கூடாது. பா.ஜ.க. ஆட்சியில் இருக்கக் கூடாது இது தான் ஒரே குறிக்கோள். ஆட்சிக்கு யார் வருகிறார்கள் என்பதை பிறகு பார்த்துக் கொள்ளலாம். அந்த ஆட்சி ஒரு நாள் நீடித்தால் கூட மாற்றம் நிகழும்.

ஏன் என்றால், 9 ஆண்டுகள், பத்து ஆண்டுகள் கழித்து நீங்கள் மக்களிடம் செல்லும் போது நிச்சயமாக மாற்றம் இருக்கும். நீங்கள் நினைக்கின்ற மாதிரி கிடையாது, மோடி காலத்திற்கும் பிரதமர் மாதிரியும், பா.ஜ.க. ஒன்றும் தோற்கடிக்கப்பட முடியாத சக்தியே கிடையாது. பா.ஜ.க. வும் தோற்கடிக்கப்படக் கூடிய சக்திதான், பிரதமர் நரேந்திர மோடியும் தோற்கடிக்கப்படக் கூடிய சக்திதான். இவர்கள் எல்லோரையும் விட ஜனநாயகம் வலுவானது. பா.ஜ.க.வினர் திரும்பத் திரும்ப மைண்ட் கேமை வைத்துத்தான் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பி.ஜே.பி. தோற்கடிக்கப்படாத சக்தி என்பதை ஊடகங்களின் துணை கொண்டு மக்கள் மனதில் நன்றாக பதிய வைத்து இருக்கிறார்கள். அது இல்லை என்பது இன்றைக்கு தெரிய ஆரம்பித்து இருக்கு. எதிர்க்கட்சி ஒற்றுமை உண்மையிலேயே அவர்களை மிகப் பெரிய கலக்கத்திற்குள் தள்ளி இருக்கிறது. அதில் சந்தேகமே வேண்டாம். கெஜ்ரிவால் நேற்றைக்கு எடுத்த நிலைப்பாடு, நாடாளுமன்றத்தில் டெல்லி குறித்த சட்டத்திற்கு எதிராக காங்கிரஸ் வாக்களிக்கும் என்று காங்கிரஸ் சொன்னது. ஆம் ஆத்மி கட்சிக்கு பலம் சேர்த்து இருக்கிறது. அவர்கள் வருகிறார்கள். மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, நிதிஷ் குமார், கெஜ்ரிவால், இந்தக் கூட்டணி, கண்டிப்பாக வலுவானக் கூட்டணி, அதாவது ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள், மோடியின் அட்டூழியங்களை தெரிந்து கொள்வதற்கு அடுத்த தேர்தலில். மோடியை இறக்குவதற்கு நூறு சீட்டு இல்லே, 70 சீட்டு இறங்கினால் போதும், கூட்டணி அரசு என்று ஒன்று பி.ஜே.பி. தலைமையில் வந்தால் கூட மோடி பிரதமர் கிடையாது.

அதுவே எதிர்க்கட்சிகளுக்கு பெரிய வெற்றி. நரேந்திர மோடியை, அமித் ஷாவை மூன்று மாத காலம் பதவியில் இல்லாமல் நீங்கள் செய்துவிட்டீர்கள் என்றால், ஜனநாயக முறையில், கண்டிப்பாக மூச்சு விடுவதற்கு இந்திய ஜனநாயகத்திற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். அது அவங்களுக்கும் நன்றாகத் தெரிகின்றது. இந்தப் பதற்றம் வாஜ்பாய் கிட்டே இல்லை. 2004 ஜனவரியில் அத்வானி ரதயாத்திரை சென்றார். வாஜ் பாய், அத்வானி போன்ற தலைவர்களிடத்தில் குறிப்பாக வாஜ்பாய் அவர்களிடத்தில் இந்தப் பதற்றம் இல்லை. இந்தப் பதற்றம் மோடிக்கு ஏன் வந்திருக்கிறது. 2001 நவம்பரில் இருந்து பதவியில் இருக்கார். அதுவும் இருபது ஆண்டுகள் பதவியில் இருக்கிறார். அதுவும் பதவி என்றால் சாதாரண பதவி இல்லை. ஜோதி பாசு கூட இருபது ஆண்டுகள் பதவியில் இருந்தார். ஆனால் இந்த மாதிரி சிஸ்டம் எல்லா வற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள், தன் கட்டை விரலுக்குள் வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு அரசியல் வாதி இந்திய வரலாற்றில் இருந்ததே இல்லை.

அப்படி என்றால், அவர் பதவி இழந்தால், அல்லது பதவி இழக்கக் கூடிய காலச் சூழல் கனிந்து வருகிறது என்பதை அவர் உணர்ந்தால் தன் கண் முன்னால் அந்த எதார்த்தம் விசுவரூபம் எடுத்து நிற்கிறது என்பதை அவர் உணர்ந்தால், அவர் என்னவெல்லாம் செய்வார் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இந்த அமலாக்கத் துறை சோதனைகள். இது தான் கர்மா விதி, எவ்வளவு தூரம் பந்தை மேலே எறிந்தாலும் கீழே இறங்கி ஆகவேண்டும்.

நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் 91-96 சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் போது, ஜெயலலிதா ஆட்சியின் போது, சட்டமன்றத்தில் பேசும் போது மிக அழகாகக் கூறினார். முன்னாள் எம்.எல்.ஏ., முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர் என்பது தான் நிரந்தரம்.

“முன்னாள் முதலமைச்சர், முன்னாள் பிரதமர், முன்னாள் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. என்பது தான் நிரந்தரமானது, பிரதமர், முதலமைச்சர், எம்.எல்.ஏ., எம்.பி. எல்லாம் நிரந்தரமில்லாதது. இந்த அடக்கம் இருந்தால் இந்தத் தவறுகள் எல்லாம் நடக்காது. காலமெல்லாம் நான் தான் பிரதமராக இருக்கப்போவதாக நரேந்திர மோடியும், தாங்கள்தான் நிரந்தரமாக இந்தியாவில் ஆளப்போவதாக பா.ஜ.க.வும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஒரு போதும் வெற்றிபெறப் போவதில்லை. முதலமைச்சர் கூறியதுபோல் எத்தனை ரைடு வந்தாலும், முதல் ரைடுக்குதான் பயப்படுவாங்க, தொடர்ந்து இப்போதுஅனைத்து அமைச்சர் களும் தயாராக இருப்பாங்க. மற்றொன்று இதனுடைய வீரியம் என்பது அப்படியே குறைந்துவிடும்.

இரண்டு வாரமாக பரவலாக பேசினது. என்னிடமே எத்தனையோ பேர் கேட்டார்கள். என்ன சார் பொன்முடி தான் அடுத்த டார்க்கெட்டா என்று. நேற்று மதியத்தில் கூறியது, அடுத்து யார் வீட்டிலேயோ ரைடாமே, மந்திரியை நீக்குறாங்களாமே, ஏதோ பெரிதாக நடக்கப் போகுதாமே, இது பரவலாக பேச ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ரகசியத்தன்மை என்பது முற்றிலும் மறைந்து விட்டது. இந்த ஊடக வெளிச்சம் என்பது எவ்வளவு நாட்களுக்கு இருக்கும். ஒரு அமைச்சரை அரஸ்ட் செய்தால் இருக்கும், இரண்டு அமைச்சர்களை ரைடு செய்தால் இருக்கும், வாரம் ஒரு அமைச்சர் வீட்டுக்குப் போனால் இது எங்கே இருக்கப் போகுது. நிச்சயமாக சொல்கிறேன் பாலாஜி. என் அனுபவத்தில் சொல்கிறேன், தோல்வியின் விளிம்பில் இருக்கின்ற ஒரு மத்திய சர்க்கார், மத்திய அரசு என்னவெல்லாம் செய்யுமோ, அதை எல்லாம் மோடி அரசு இப்போது செய்துக்கிட்டு இருக்கு.

ஒரு விதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியது போல் தமிழகத்தில் எதிர்க்கட்சிகளின் அரசியல் வேலையை மோடி எளிதான நிலையில் ஆற்றிக் கொண்டிருக்கிறார். இது கண்டிப்பாக பூமராங் ஆகும். பொன்முடி சட்டப்படி வழக்கை சந்திக்கட்டும், 2013 வழக்கை இப்போது எதற்காக அமலாக்கத்துறை மூலம் தோண்டப்படுகிறது. அதுவும் இன்று எதிர்க்கட்சித்தலைவர்கள் கூட்டம், காலையில் ரைடு செய்ய போவானேன்? இவை இரண்டுக்கும் சம்பந்தமே இல்லை, தொடர்பே இல்லை, அமலாக்கத் துறை தன்னுடைய வேலையைச் செய்கிறது என்று மக்களை நம்ப வைக்குறாங்களா, காதில் பூ சுற்றுகிறார்களா, கூச்சமே இல்லாமல் தேசத்தின் பிரதம மந்திரி சொல்கிறார், 70 ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை அடித்தார்கள், அவர்கள் மகாராஷ்டிராவில் அரசியல் வாதியாக இருக்கிறார்கள், அவர்கள் தப்ப முடியாது என்கிறார், சொல்லி பத்து நாட்களுக்குள் அவரை அமைச்சராக ஆக்குகிறீர்கள். வெட்கம் கெட்டவர்கள். இப்படி ஒரு வெட்கங்கெட்ட அரசு இந்தியாவில் இருந்ததே கிடையாது. அவருக்கு நிதித்துறையைக் கொடுக்குறாங்க.

இதேதாங்க ஹேமன் பிஸ்வாஸ்க்கு நடைபெற்றது. அமித்ஷா காங்கிரஸ் ஊழலைப் பற்றி புத்தகம் வெளியிடுகிறார். அதில் முக்கிய கதாநாயகனே ஹேமன் பிஸ்வாஷ் தான் இது 2015 இல் நடைபெற்றது.

2017இல் அவர் பா.ஜ.க.வில் சேர்ந்து விடுகிறார். இன்றைக்கு அவர் பா.ஜ.க.வில் முக்கியத் தலைவர். இதே மாதிரி எத்தனை வழக்குகள். பி.ஜே.பி. வாஷிங் மிஷினில் போட்டு, உங்களை தூய்மையாக்கி எடுத்துக் கொள்ளும். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இது நாளைக்கு அவர்களுக்கும் நடக்கும்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் மணி பேட்டியளித்தார்.

## பொன்முடி மீதான சோதனை குறித்துப் பேச அ.தி.மு.க.வுக்கு தகுதி கிடையாது!